மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உபரி நிலங்கள் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று நிர்ணயித்த பிறகு கிடைக்கும் உபரி நிலங்கள் பற்றியவையாகும். அந்தச் சட்டத்தின் விதிகளிலிருந்து தப்பிப்போவதற்காக டெய்ரி என்றும், பால் பண்ணை என்றும் பல ஏக்கர் நிலங்களைக் காட்டி வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது நெய்க்காரப்பட்டியாக இருக்கும் என்று நினைக்கிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்புவதற்காக டெய்ரி பார்ம், மேய்ச்சல்காடு என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இப்போது நாம் கமிட்டியில் ஆலோசித்துக் கொண்டிருக்கும் முறைகளையெல்லாம் அவர்கள் கையாண்டிருக்கிறார்கள். எனக்குச் சரியாக நினைவிருந்தால், அதற்கு ''நரேந்திரா டெய்ரி பார்ம்'' என்று பெயர். அங்கெல்லாம் பால் பண்ணை என்று போர்டு தான் இருக்குமே தவிர, வேறொன்றும் இருக்காது. இதற்காக 500 ஏக்கர் வைத்திருப்பார்கள். மாடு இருக்காது. ஆனாலும் அந்த நிலங்கள் எல்லாம் விதிவிலக்கின் அடிப்படையில் தப்பித்துக் கொண்டிருந்தன. அதைப்பற்றித்தான் நாம் இப்போது கமிட்டி போட்டு ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். அது பற்றிய விதி விலக்குகளில் எவை எவைகளை வைத்துக் கொள்ளலாம், எதையெதையெல்லாம் கொஞ்சம் குறைக்கலாம் என்பதுபற்றி எல்லாம் கூட இப்போது மன்றத்தின் முன்னாலே வந்துகொண்டிருக்கின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : இதுவரை வழங்கப்பட்ட உபரி நிலங்களில் பயனடைந்த விவசாயிகள் எத்தனை பேர் என்று மாவட்ட வாரியாக அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : என்னிடம் இப்போதிருக்கிற விவரமெல்லாம் மொத்தம் 16,000 ஏக்கர் நிலங்கள் விநியோகிக்கப் பட்டிருக்கின்றன என்பது தான். அதை எத்தனை குடும்பங்களுக்கு அளித்திருக்கிறார்கள் என்ற கணக்கு விவரம் இல்லை. அந்தக் குடும்பங்களின் எண்ணிக்கை நிலங்களை விட கண்டிப்பாகக் குறைவாகத் தான் இருக்கும்.

Raffle tickets

*77. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the amount for which Tamil Nadu Raffle Tickets were sold in other States so far ; and

(*b*) the amount so far disbursed to persons of other States by way of prizes ?

பரிசுச் சீட்டுகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள் இதுவரையில் ஏனைய மாநிலங்களில் எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டுள்ளன ?

(இ) ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரையில் பரிசாக வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ரூபாய் 1,28,51,000.
(இ) ரூபாய் 37,57,600.

திரு. ஜி. சுவாமிநாதன் : வெளி மாநிலத்திலிருந்து ஏராளமான சீட்டுக்கள் நம்முடைய மாநிலத்தில் விற்றுக்கொண்டிருக்கின்றன. நம்முடைய பணம் வெளி மாநிலத்திற்குப் போய்க்கொண்டிருப்பதால், அதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதில் எந்தத் திட்டவட்டமான கருத்துக்கும் நாம் வருவதற்கு இப்போது முடியாது. நம்மிடமிருந்து மற்ற மாநிலங்களுக்குப் போகிறது. மற்ற மாநிலக்காரர்களும் சண்டை போடுகிறார்கள். பிற மாநிலங்களின் டிக்கெட்டுகள் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றன. பொதுவாக இந்தப் பரிசுச் சீட்டு விவகாரத்தில், இந்திய பூ பாகத்தில் தமிழ் நாடு முதல் பரிசை வாங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு டில்லியில் பாராளுமன்றத்தில் எந்த ஊரில் இந்தத் திட்டம் நன்றாக நடக்கிறது என்று கேள்வி எழுந்தபோது, தமிழ்நாடு என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தப் பரிசுச் சீட்டை அந்தந்த மாநிலத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி தென் மண்டலக் கவுன்சிலின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மீண்டும் இதுபற்றி ஒரு முடிவும் எடுக்கப்படவில்லை. விவாத அளவில்தான் இருக்கிறது.

THIRU A.R. DAMODARAN : May I know from the Minister whether the difficulties with the Audit people as to whether this raffle fund should be taken to the Consolidated Fund or whether it should be treated as a separate fund have been resolved and, if so, whether the amount of Rs. 10 crores will be specifically tied to certain projects in our State ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is accounted for under the Tamil Nadu Special Welfare Fund constituted specially for that purpose.

DEPUTY CHAIRMAN : Question 78 is postponed.

Muthuraja Community

*79. —THIRU DEIVASIGAMANI ARUNACHALA DESIKAR (KUNRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(*a*) whether the Muthuraja Samuha Sangam functioning in Trichi District has requested the Government to declare that the Muthuraja, Mutharaiyar, Valayan Communities which are included in the list of Backward Classes announced by the Government belong to the Muthuraja Community only ; and

(*b*) if so, the action taken thereon ?